# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரிச் சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

**2008, பெப்புருவரி மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 20.00** **தபாற் செலவு: ரூபா 7.50**

# 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரிச் சட்டம்

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. ஓ. 28/2005

**பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி ஒன்றினைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரியின் குறிக்கோள்களையும் பணிகளையும் இனம் காண்பதற்கும் ; முகாமைக்கும் நிர்வாகத்திற்கும் ஏற்பாடு செய்வதற்கும் ; அதனோடு தொடர்புபட்ட, அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

1. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயர்.

## பாகம் I

## பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரியைத் தாபித்தல்

2. (1) (இதனகத்துப்பின்னர் "பணியாட்டொகுதி கல்லூரி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "பாதுகாப்பு சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி" என அழைக்கப்படும் கல்லூரியொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரியினைத் தாபித்தல்.

(2) பணியாட்டொகுதிக் கல்லூரி (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அது இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினை ஒன்றினையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

2 –PL 002553 – 1,300 (2007/10)

பணியாட்டொகுதிக் கல்லூரி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பொறுப்பாதல் வேண்டும்.

3. பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் எந்தக் குறிக்கோள்களுக்காக பணியாட்டொகுதிக் கல்லூரியினைத் தாபிக்கப்படுகின்றதோ அந்தக் குறிக்கோள்களை அடையும் நோக்கில் பணியாட்டொகுதிக் கல்லூரியின் திறனான முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தினை உறுதிப்படுத்தும் பொறுப்பு பொறுப்பிக்கப்பெற்றிருத்தல் வேண்டும்.

பணியாட்டொகுதிக் கல்லூரியின் குறிக்கோள்கள்.

4. பணியாட்டொகுதிக் கல்லூரியின் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் :-

(அ) எந்த சேவைக்கு ஆயுதந்தாங்கிய படைகளின் அலுவலர்கள் உரித்தானவர்களோ அந்தந்தச் சேவையில் தோதான நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகளுக்கு அவர்களைத் தயார் செய்வதற்கும் ஆயத்தம் செய்வதற்குமான நோக்கில் பணியாட்டொகுதிக் கல்லூரியில் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஆயுதந்தாங்கிய படைகளின் அலுவலரது உயர்தொழில் அறிவு மற்றும் புரிந்துணர்வை விருத்திசெய்தல் ;

(ஆ) சமாதானம் யுத்தம் இரண்டிலும், தனியான சேவை மற்றும் இணைந்த சேவைகளின் சூழ்நிலையில் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிப் பணிகள் இரண்டிலும் திறமையாக பணியாற்றுவதற்கு பணியாட்டொகுதிக் கல்லூரியில் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஆயுதந்தாங்கிய படைகளின் அலுவலர்களைத் தயார்செய்தலும் ஆயத்தம் செய்தலும், அவர்களின் பணிகள் தொடர்பிலான பொதுவான கல்வி ஒன்று ஏவலிலும் பணியாட்டொகுதி நியமனங்களிலும் திறமையாக நிறைவேற்றுவதற்கு அவர்களை இயலச் செய்யும் நோக்கில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

பணியாட்டொகுதிக் கல்லூரியின் பணிகள்.

5. பணியாட்டொகுதிக் கல்லூரிக்கு அதனுடைய குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, பின்வரும் பணிகள் எல்லாம் அல்லது ஏதேனும் ஒன்று உரித்தாக்கப்படுதல் வேண்டும் :-

(அ) பணியாட்டொகுதிக் கல்லூரியில் கற்கைநெறிகளை மேற்கொள்வதற்கு இலங்கையின் ஆயுதந்தாங்கிய படைகளிலிருந்து மாணவ அலுவலர்களைச் சேர்த்துக் கொள்ளல் ;

(ஆ) பணியாட்டொகுதிக் கல்லூரியில் கற்கைநெறிகளை மேற்கொள்வதற்கு பொலிஸ் திணைக்களத்திலிருந்தும் இலங்கைக்கு வெளியேயான இராணுவ தாபனங்களிலிருந்தும் மாணவ அலுவலர்களைச் சேர்த்துக் கொள்ளல் ;

(இ) பணியாட்டொகுதிக் கல்லூரியில் பாதுகாப்பு மற்றும் இராணுவ முகாமைத்துவம் தொடர்பாக கற்கைகள் சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான கற்கைநெறிகளை மேற்கொள்வதற்கு பகிரங்க அலுவலர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், அவசியமானவிடத்து விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களை விதித்தலும் ;

(ஈ) தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிகளில் தேர்ச்சி கொண்டிருக்கின்றவர்களான பந்திகள், (அ), (ஆ) மற்றும் (இ)யின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவ அலுவலர்களை ஆய்ந்தறியும் நோக்கத்திற்கு பரீட்சைகளை நடாத்துதல் ;

(உ) கற்கைநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதன் மீது, மாணவ அலுவலர்கள் மற்றும் பகிரங்க அலுவலர்களுக்கு (கல்லூரியில் சித்தியடைந்த பணியாட்டொகுதி) "கசிப" சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் பதவியைக் கொடுத்தலும் அளித்தலும் ;

(ஊ) பணியாட்டொகுதிக் கல்லூரியின் நோக்கங்களுக்கு நூலகங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் வேறு கட்டடங்களை நிறுவுதலும் சாதனமயப்படுத்தலும் பராமரித்தலும் ;

(எ) பணியாட்டொகுதிக் கல்லூரியின் வினைத்திறனான பணியாற்றுகைக்கு தேவைப்படுத்தக்கூடியவாறான பேராசிரியர் பதவிகள், விரிவுரையாளர்கள் பதவிகள் மற்றும் வேறு பதவிகளை உருவாக்குதல் ;

(ஏ) பணியாட்டொகுதிக் கல்லூரியின் அலுவலர்களை நிர்வகிப்பதற்கு அவசியமானவாறான அத்தகைய ஊழியர்கள் மற்றும் முகவர்களை நியமித்தல் ;

(ஐ) உள்நாட்டு வளங்களில் இருந்தாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டு வளங்களில் இருந்தாயினுஞ்சரி மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளல் ;

(ஒ) முகாமைச்சபை கருதக்கூடியவாறான அத்தகையமுறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்புமீதும் பணியாட்டொகுதிக் கல்லூரியின் நோக்கங்களுக்காக பணத்தினைக் கடன்பெறுதலும் திரட்டுதலும் ;

(ஓ) இச்சட்டத்தினால் அல்லது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, நன்கொடை, மரணசாதனக் கையளிப்பு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை எடுத்தல் அல்லது வைத்திருத்தல் அத்துடன் ஏதேனும் அத்தகைய அசையும் அல்லது அசையா ஆதனத்தை விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்குக் கொடுத்தல், மானியக்கொடையளித்தல், உரித்து மாற்றுதல், விருப்பாவண நன்கொடையளித்தல், சாட்டுதல், கொடுத்துமாற்றுதல் அல்லது வேறுவகையாக கையுதிர்த்தல் ;

(ஔ) பணியாட்டொகுதிக் கல்லூரியின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கைகளை பணியாட்டொகுதிக் கல்லூரியால் அதன் சார்பில் நேரடியாக அல்லது எவரேனும் அலுவலர் ஊடாக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஊடாக செய்துகொள்ளுதல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் ;

(க) முகாமைச்சபை கருதக்கூடியவாறான அத்தகையமுறையில், அதனுடைய நிதியங்களை முதலீடு செய்தல் ; அத்துடன்

(ங) அதனுடைய குறிக்கோள்களை எய்தவதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான உசிதமான அல்லது இடைநேர்விளைவான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல்.

பணியாட்டொகுதிக் கல்லூரியின் இலச்சினை.

6. (1) பணியாட்டொகுதிக் கல்லூரியின் இலச்சினையானது, முகாமைச்சபை காலத்திற்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) பணியாட்டொகுதிக் கல்லூரியின் இலச்சினையானது முகாமைச்சபையால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) பணியாட்டொகுதிக் கல்லூரியின் இலச்சினையானது தவிசாளர் மற்றும் முகாமைச்சபையின் வேறொரு உறுப்பினரின் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான எச்சாதனத்திலும் அல்லது ஆவணத்திலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் அவர்களிருவரும் கையெழுத்திடுதல் வேண்டும் :

ஆயின், பணியாட்டொகுதிக் கல்லூரியின் இலச்சினை ஏதேனும் சாதனம் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படும் நேரத்தில், தவிசாளர் சமுகமாயிருக்கமுடியாதவிடத்து, அது சார்பாக தவிசாளரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் முகாமைச்சபை வேறு எவரேனும் உறுப்பினர் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய சாதனம் அல்லது ஆவணத்தில் கையெழுத்திடுவதற்கு தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.

(4) பணியாட்டொகுதிக் கல்லூரியானது எந்த எல்லா சாதனங்கள் அல்லது ஆவணங்களிற்கு பணியாட்டொகுதிக் கல்லூரியின் இலச்சினை பொறிக்கப்படுகின்றதோ அந்த எல்லாச் சாதனங்கள் அல்லது ஆவணங்களிற்கு பதிவேடு ஒன்றைப் பேணுதல் வேண்டும்.

## பாகம் II

## பணியாட்டொகுதிக் கல்லூரியின் முகாமைச்சபை, முனைஞன் மற்றும் கற்கைகள் சபை அத்துடன் நல்லொழுக்கச் சபை

பணியாட்டொகுதிக் கல்லூரியின் முகாமைச் சபையின் அமைத்துருவாக்கம்.

7. (1) பணியாட்டொகுதிக் கல்லூரியின் அலுவல்களின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைச்சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். இது பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், இவர் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் மேலதிகச் செயலாளர், இவர் தவிசாளர் சமுகமளிக்காதபோது ஏதேனும் சபையின் கூட்டத்திற்கு தலைமைதாங்குதல் வேண்டும் ;

(இ) பிரதம பாதுகாப்புப் பணியாட்டொகுதி ;

(ஈ) தரைப்படை ஏவுநர், கடற்படை ஏவுநர் மற்றும் விமானப்படை ஏவுநர் ;

(உ) திறைசேரிச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ஊ) களனிப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ;

(எ) பணியாட்டொகுதிக் கல்லூரியின் முனைஞனாக அப்போதைக்கு பதவி வகிக்கும் ஆள் ; அத்துடன்

(ஏ) பணியாட்டொகுதிக் கல்லூரியின் "பிரிகேடியர் ஒருங்கிணைப்பு" ஆக அப்போதைக்கு பதவிவகிக்கும் ஆள், அவர் சபையின் செயலாளராக இருத்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் மேலதிகச் செயலாளர், அமைச்சரினால் எவ்வாளுக்கு பணியாட்டொகுதிக் கல்லூரி எனும் விடயம் குறித்தொதுக்கப்படுகின்றதோ அவ்வாளாதல் வேண்டும்.

பணியாட்டொகுதிக் கல்லூரியின் படைப் பகுதிகள்.

8. (1) பணியாட்டொகுதிக் கல்லூரி, சபையினால் காலத்திற்குக் காலம் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய படைப் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சபையானது, இலங்கையின் அந்தந்த ஆயுதம்தாங்கிய படைகளின் ஏவுநர்களின் விதப்புரை மீது பணியாட்டொகுதிக் கல்லூரியின் போதனை பணியாட்டொகுதியினர் மற்றும் நிரந்தரப் பணியாட்டொகுதியினரின் அலுவலர்களை நியமித்தல் வேண்டும். அவர்கள் முன்னரே பதவி வறிதாகியிருந்தாலன்றி மூன்று வருடங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும்.

(3) சபையானது, இலங்கை ஆயுதந்தாங்கிய படைகளின் அந்தந்த ஏவுநர்களின் விதப்புரையின் மீது, பணியாட்டொகுதிக் கல்லூரிக்கு வேறு பதவி வரிசையைச் சேர்ந்த பணியாட்டொகுதியினரை நியமித்தல் வேண்டும். இவர்கள் தங்கள் பதவிகளை முன்னரே வறிதாக்கினாலன்றி மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும்.

9. (1) இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கமைய, சபையானது சபையின் கூட்டங்கள் தொடர்பில் அதன் நடவடிக்கைமுறையையும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்களின் நிறைவேற்றுகையையும் ஒழுங்குபடுத்தலாம். சபையின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கு ஐந்து உறுப்பினர்கள் கூட்ட நடப்பெண்ணொன்றாக அமைதல் வேண்டும் :

ஆயினும், ஐந்து உறுப்பினர்களுள் குறைந்தபட்சம் இரண்டு உறுப்பினர்களாவது இலங்கை ஆயுதந்தாங்கிய படைகளுள் ஏதேனும் ஒன்றின் ஏவுநர்களாக இருத்தல் வேண்டும்.

10. இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கமைய, சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கைமுறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களின் நிறைவேற்றுகையையும் ஒழுங்குபடுத்தலாம். சபையின் கூட்டங்கள்.

11. சபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கைமுறை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்றுள்ளது அல்லது அதன் உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடுள்ளது என்ற காரணத்தினால் மாத்திரம் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது. உறுப்பினர்கள் மத்தியிலான வெற்றிடம் சபையின் நடவடிக்கை முறைகளைச் செல்லுபடியற்றதாக்கப்படுதல் ஆகாது.

12. சபை பணியாட்டொகுதிக் கல்லூரிக்கு வரவு செலவு ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்கு சாத்தியப்படக் கூடியவாறான விரைவில் விடயத்திற்கேற்ப ஆண்டு மதிப்பீடுகளை அல்லது குறைநிரப்பு மதிப்பீடுகளைப் பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ஊடாக திறைசேரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஆண்டு மதிப்பீடுகள்.

முனைஞன்.

13. (1) பாதுகாப்பு அமைச்சர் தரைப்படையில் மேஜர் ஜெனரல் பதவி வரிசையை அல்லது கடற்படையில் ரியல் அட்மிரல் பதவி வரிசையை அல்லது வான்படையில் எயார் வைஸ் மார்ஷல் பதவி வரிசையை வகிக்கும் தகைமைபெற்ற சிரேஷ்ட அலுவலர் ஒருவரை பணியாட்டொகுதிக் கல்லூரியின் முனைஞனாக நியமித்தல் வேண்டும் (இதனகத்துப்பின்னர் 'முனைஞன்' எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) ; இவர் பணியாட்டொகுதிக் கல்லூரியின் பிரதம நிறைவேற்று அலுவலராதல் வேண்டும். "முனைஞன்" ஒய்வுபெறுவதனால், இறப்பினால், பதவி விலகலினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் அவரது பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி மூன்று ஆண்டுகளை விஞ்சாத வொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) முனைஞர் அதன்பொருட்டு அமைச்சருக்கு முகவரியிடப் பட்டு அமைச்சுச் செயலாளர் ஊடாக பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பப்படும் எழுத்திலான அறிவிப்பின்மூலம் முனைஞனாக அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(3) அமைச்சர் அவ்வாறு செய்வது உசிதமானது என அவர் கருதுவாராயின் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் தெரிவிக்கப்படும் காரணங்களுக்காக முனைஞனை பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) எந்த முனைஞன் தொடர்பில் (3) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த முனைஞன் அத்த கைய கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய வேறு தேதியன்று அவரது பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(5) முனைஞனாக நியமிக்கப்பட்ட ஆள் -

(அ) முனைஞனாக அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் பதவியை வறிதாக்கும்பட்சத்தில் அல்லது எந்தத் தோதான இலங்கையின் ஆயுதந்தாங்கிய படையின் உறுப்பினரொருவராக இருந்தாரோ அந்த ஆயுதந் தாங்கிய படையின் உறுப்பினரொருவராக இல்லா தொழியும்பட்சத்தில் அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு தகைமைபெற்ற அலுவலர் ஒருவரை முனைஞனாக நியமித்தல் வேண்டும் ; இவர் பதவியை முன்னரே வறிதாக்கினா லன்றி மூன்று ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் ஏதுவினால் அவரது பதவிக்குரிய பணிகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருக்கும்பட்சத்தில், அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய காலப்பகுதியின்போது முனைஞனாக அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென விடயத்திற்கேற்ப தரைப்படையின், கடற்படையின் அல்லது வான்படையின் பிரதம போதனாசிரியரின் பதவிவரிசையை வகிக்கும் மிகுந்த முதுநிலையினரான ஆளை நியமித்தல் வேண்டும்.

முனைஞனின் கடமைகள்.

14. (1) முனைஞன் சபையின் பொதுப்பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய, பணியாட்டொகுதிக் கல்லூரியின் அலுவல்களின் நெறிப்படுத்துகையும் பணியாட்டொகுதிக் கல்லூரியின் பணிகளின் நிறைவேற்றுகையும் பொறுப்பிக்கப் பெறுதல் வேண்டும். அவர் பணியாட்டொகுதிக் கல்லூரியின் பொதுவான நிர்வாகத்தையும் ஊழியர்களினதும் மாணவ அலுவலர்களினதும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் பொறுப்பிக்கப்பெறுதல் வேண்டும்.

(2) முனைஞன் அவசியமானவை எனக் காலத்துக்குக்காலம் அவர் கருதக்கூடியவாறான அவரது அத்தகைய கடமைகளைச் சபையின் அங்கீகாரத்துடன் பணியாட்டொகுதிக் கல்லூரியின் எவரேனும் ஊழியருக்கு எழுத்தில் கையளிக்கலாம். அத்தகைய பணிகள் எந்த ஊழியருக்குக் கையளிக்கப்படுகின்றதோ அந்த ஊழியர் எவரும் முனைஞனின் பொதுவான அல்லது விசேட பணிப்பிற்கமைய நிறைவேற்றுதல் வேண்டும். அத்தகைய கையளிப்பு எவ்வாறிருப்பினும் அவசியமானவிடத்து அத்தகைய பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றுதல் முனைஞனுக்குத் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும்.

(3) முனைஞன் சபையுடனான கலந்தாலோசனையுடன் பணியாட்டொகுதிக் கல்லூரியால் மாணவ அலுவலர்களுக்கு ஏற்பாடுசெய்யப்படவுள்ள மருத்துவ, நலன்பேணல் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளைத் தீர்மானிக்கலாம்.

(4) முனைஞன் பணியாட்டொகுதிக் கல்லூரியின் பாதுகாப்பிற்கும் முற்பாதுகாப்பிற்கும் அவசியமான வழிமுறைகளை மேற்கொள்ளலாம்.

பணியாட்டொகுதிக் கல்லூரியின் கற்கைகள் சபை.

**15.** (1) கல்வி மற்றும் பாதுகாப்பு சார்ந்த கற்கைகள் தொடர்பில் பணியாட்பொகுதிக் கல்லூரியின் அலுவல்கள், கற்கைகள் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். கற்கைகள் சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) 13 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட முனைஞன் ;

(ஆ) களனி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் ;

(இ) தரைப்படை, கடற்படை மற்றும் வான் படைப்பிரிவின் பிரதம போதனாசிரியர்கள்.

(2) கற்கைகள் சபை, அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட பணிகளை சபையின் பொதுப் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அத்துடன் சபையால் அதன்பொருட்டு ஆக்கப்படக்கூடிய எவையேனும் விதிகளுக்கும் அமைய நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) கற்கைகள் சபை, பணியாட்டொகுதிக் கல்லூரியின் போதனை, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் பரீட்சைகள் மீது கட்டுப்பாட்டையும் பொதுப் பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) கற்கைகள் சபை பின்வரும் தத்துவங்களினதும் கடமைகளினதும் அத்துடன் பணிகளினதும் பிரயோகத்தையும் நிறைவேற்றுகையையும் புரிகையையும் பொறுப்பிக்கப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) பணியாட்டொகுதிக் கல்லூரியால் வழங்கப்படவுள்ள பாடநெறிகளையும் அத்தகைய பாடநெறிகளுக்கான பாடவிதானத்தையும் இனம்கண்டு சபைக்கு விதந்துரைத்தல் ;

(ii) பணியாட்டொகுதிக் கல்லூரியால் வழங்கப்படும் பாடநெறிகளுக்கு அளிக்கப்படவேண்டிய பட்டங்களையும், திப்ளோமாக்களையும், சான்றிதழ்களையும், வேறு கல்விசார் சிறப்புக்களையும் தீர்மானித்தல் ;

(iii) அத்தகைய பட்டங்களுக்கும் திப்ளோமாக்களுக்கும் சான்றிதழ்களுக்கும் அத்துடன் வேறு கல்விசார் சிறப்புக்களுக்கும் தகைமைபெற விரும்பும் மாணவர்களால் மேற்கொள்ளப்படவேண்டிய பயிற்சியையும் சித்தியடையவேண்டிய பரீட்சைகளையும் திருப்திப்படுத்தப் படவேண்டிய வேறு நிபந்தனைகளையும் இனம் காணுதல் ;

(iv) சபையால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்தைப் பரிசீலனைசெய்து அதன்மீது அறிக்கை சமர்ப்பித்தல் ;

(v) பணியாட்டொகுதிக் கல்லூரியால் நடாத்தப்படும் பாடநெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது பரீட்சைகள் தொடர்பான விடயங்கள் பற்றி விதப்புரைகளையும் அறிக்கைகளையும் முன்வைத்தல் ;

(vi) ஏதேனும் அல்லது எவையேனும் விசேட விடயத்தை அல்லது விடயங்களைப் பரிசீலனை செய்து அதனை அல்லது அவற்றைப் பற்றி அறிக்கையிடும் நோக்கத்திற்கு கற்கைகள் சபையின் உறுப்பினர்களாக அல்லாத ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமித்தல் ;

(vii) சபைக்கு -

(அ) கற்கைநெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளை ;

(ஆ) ஆசிரியர்களாக அல்லது பரீட்சகர்களாக அங்கீகரிக்கப்படுவதற்குத் தகுந்தவர்களான ஆட்களை ;

(இ) விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்து அத்துடன் விதித்துரைக்கப்பட்ட வேறு நிபந்தனைகளைத் திருப்தி செய்து பட்டங்களுக்கும் டிப்ளோமாக்களுக்கும் சான்றிதழ்களுக்கும் வேறு கல்விசார் சிறப்புகளுக்கும் தகைமைபெற்ற ஆட்களை,

விதித்துரைத்தல் ;

(viii) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்களுக்கும் புலமைப் பரிசில்களுக்கும் புலமைப் பொருளுதவிகளுக்கும் ஏழைக்கல்வியுதவிகளுக்கும் பதக்கங்களுக்கும் வேறு பரிசுகளுக்குமான போட்டியின் முறையையும் நிபந்தனைகளையும் இனம் காணுதல் ; அத்துடன்

(ix) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்களினதும் புலமைப் பரிசில்களினதும் புலமைப் பொருளுதவிகளினதும் ஏழைக்கல்வியுதவிகளினதும் பதக்கங்களினதும் வேறு பரிசில்களினதும் அளிப்பிற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைக் குறிப்பிடுதல்.

ஒழுக்காற்றுச் சபை.

**16.** சபை முனைஞனுடனான கலந்தாலோசனையுடன் பின்வருவோரைக் கொண்ட ஒழுக்காற்றுச் சபையொன்றை நியமித்தல் வேண்டும் :—

(அ) அந்தந்தப் படைப்பிரிவின் பிரதம போதானாசிரியர் ; அத்துடன்

(ஆ) முனைஞனின் அபிப்பிராயப்படி குறிப்பிட்ட துர்நடத்தையைப் பயனுறுதியுடன் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வேறு எவரேனும் அலுவலர்.

ஒழுக்காற்றுக் கோவையும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டின் பிரயோகமும்.

**17.** (1) மாணவ அலுவலர் ஒவ்வொருவரும் பணியாட்டொகுதிக் கல்லூரியின் ஒழுக்காற்றுக் கோவைக்கு அமைந்தோராதல் வேண்டும். ஒழுக்காற்றுக் கோவை ஒழுங்குவிதிகளால் குறித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

(2) ஒழுக்காற்றுச் சபையால் அத்தகைய கோவையை மீறியிருப்பதாகக் காணப்பட்ட அல்லது ஏதேனும் மீறுகைக்குக் குற்றவாளியாகக் காணப்பட்ட மாணவ அலுவலர் எவரும், மாணவ அலுவலரின் நடத்தை பணியாட்டொகுதிக் கல்லூரியின் அதிசிறந்த நலனுக்கு உசிதமானதல்ல என்ற பயன்பாட்டிற்கு ஒழுக்காற்றுச் சபையால் விதப்புரையொன்று செய்யப்படுவதன் மீது கற்கைநெறியிலிருந்து முனைஞனால் மீளழைக்கப்படுவதற்கு ஆளாதல் வேண்டும்.

(3) நிரந்தரப் பணியாட்டொகுதியினரின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு முனைஞனால் அல்லது அதன்பொருட்டு முனைஞனால் அதிகாரமளிக்கப்பட்ட பணியாட்டொகுதிக் கல்லூரியின் வேறு எவரேனும் அலுவலரால் பிரயோகிக்கப் படுதல் வேண்டும்.

(4) பணியாட்டொகுதிக் கல்லூரியின் குடியியல் பணியாட் டொகுதியினரின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு சபையால் ஆக்கப் பட்ட விதிகளால் குறித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கு இணங்கியதாதல் வேண்டும்.

(5) மாணவ அலுவலர்களின் துர்நடத்தைச் செயல் ஒவ்வொன்றும் அந்தந்த சேவைக்கு ஏற்புடைத்தான சட்டங் களினதும் ஒழுங்குவிதிகளினதும் நியதிகளின்படி அவசியமாகக் கருதப்படுகின்றவாறு முனைஞனால் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கென அத்தகைய அலுவலரின் அந்தந்த சேவை முனைஞனுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(6) அரசாங்கச் சொத்துக்கு வேண்டுமென்றோ அல்லது கவனயீனமாகவோ சேதம் விளைவிப்பதற்குப் பொறுப்பான வராகக் காணப்படும் மாணவ அலுவலர் எவரும் அத்தகைய சேதத்திற்காக பணியாட்டொகுதிக் கல்லூரிக்கு நட்டோத்திர வாதமளிக்க ஆளாதல் வேண்டும்.

## பாகம் III

### நிதி

18. (1) "பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட் டொகுதிக் கல்லூரி நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) பணியாட் டொகுதிக் கல்லூரியின் நிதியம்.

(2) சபைக்கு நிதியத்தை முகாமைசெய்வதற்கும் கட்டுப்படுத்து வதற்கும் தொழிற்படுத்துவதற்குமான தத்துவம் உரித்தாக்கப் படுதல் வேண்டும்.

நிதியத்திற்கான கொடுப்பனவுகள்.

**19.** நிதியத்திற்குப் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) பணியாட்டொகுதிக் கல்லூரியின் முகாமைத்துவத்திற்கும் நிர்வாகத்திற்குமென பாராளுமன்றத்தால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இலங்கையிலாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி எத்தன்மையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகள், வெகுமதிகள் அல்லது மானியங்கள் என்ற வகையில் பணியாட்டொகுதிக் கல்லூரியால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) பணியாட்டொகுதிக் கல்லூரியால் வழங்கப்படும் பாடநெறிகள் தொடர்பில் கட்டணங்கள் என்ற வகையில் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஈ) பணியாட்டொகுதிக் கல்லூரியின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் அத்துடன் புரிகையில் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

நிதியத்திலிருந்து செய்யப்படும் கொடுப்பனவுகள்.

**20.** பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) பணியாட்டொகுதிக் கல்லூரியைத் தாபிப்பதற்கும் தொழிற்படுத்துவதற்கும் பேணுவதற்கும் அவசியமான செலவுகள் ;

(ஆ) வருகைதரும் விரிவுரையாளர்களுக்கான கட்டணங்களின் கொடுப்பனவு ; அத்துடன்

(இ) பணியாட்டொகுதிக் கல்லூரியின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமானவையாக சபையால் அங்கீகரிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறு எல்லாக் கொடுப்பனவுகள்.

கணக்குகளின் கணக்காய்வு.

21. (1) சபையானது, கணக்குகளின் தகுந்த கணக்குப் புத்தகங்களையும் பணியாட்டொகுதிக் கல்லூரியின் எல்லா வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் அத்துடன் வேறு எல்லா நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றின் கணக்குகளை வைத்திருக்குமாறு 22 ஆம் பிரிவின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட கணக்காளரைப் பணித்தல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் அரசியமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் பணியாட்டொகுதிக் கல்லூரியின் கணக்குகளின் கணக்காய்விற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பணியாட்டொகுதிக் கல்லூரியின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(4) பணியாட்டொகுதிக் கல்லூரியின் ஆண்டுக் கணக்குகள் கணக்காளரால் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் முனைஞன் ஊடாக சபைக்கு அவற்றை அனுப்பச் செய்வித்தல் வேண்டும்.

கணக்காளரின் நியமனம்.

22. (1) பணியாட்டொகுதிக் கல்லூரிக்கு கணக்காளர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) கணக்காளர், இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பணியாட்டொகுதிக் கல்லூரியின் நிதியத்தின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டுக்காக பணியாட்டொகுதி கல்லூரியின் முனைஞனுக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

வேதனாதிகளின் கொடுப்பனவு.

23. (1) மாணவ அலுவலராக பணியாட்டொகுதிக் கல்லூரிக்கு தொழிலுக்கு அமர்த்தப்பட்ட மற்றும் இணைக்கப்பட்ட எல்லாச் சேவை ஆளணியினரும், அவர்களுக்கு ஏற்புடையற்படற்பாலதான அந்தந்த சேவை சம்பள ஒழுங்குவிதிகளில் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதனாதிகள் மற்றும் படிகளுக்கு உரித்துடையவராக இருத்தல் வேண்டும்.

(2) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பணியாட்டொகுதிக் கல்லூரியிலுள்ள எல்லாச் சேவை ஆளணியினரும் இலங்கை ஆயுதந் தாங்கிய படைகளின்கீழ் தற்போதைய பயிற்சித் தாபனங்களிற்கு நியமிக்கப்பட்டவர்களுக்கு செலுத்தப்படக்கூடியவாறான ஏதேனும் மேலதிக படிகளிற்கு உரித்துடையவராக இருத்தல் வேண்டும்.

(3) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பணியாட்டொகுதிக் கல்லூரியிலுள்ள எல்லா சேவை ஆளணியினரும் நிதி அமைச்சரின் ஒருப்பாட்டுடன் காலத்திற்குக்காலம் சபையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு மேலதிக படிகளுக்கு மேலதிகமாக உரித்துடையவராகலாம்.

(4) பணியாட்டொகுதிக் கல்லூரியில் மாணவ அலுவலர் ஒருவரின் பயிற்சிக்காலம், ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் படிகளின் நோக்கங்களிற்கு கணக்கிடற்பாலதான சேவையென கருதப்படுதல் வேண்டும்.

சபையின் கடன் எடுக்கும் தத்துவம்.

24. சபையானது, அமைச்சரினதும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளைத் திறமையாக நிறைவேற்றுவதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய பணத் தொகையை மேலதிகப்பற்றுமூலம் அல்லது வேறுவகையாக கடன் எடுக்கலாம்.

## பாகம் IV

### பொது

சபையானது விதிகளை ஆக்குதல்.

25. (1) சபையானது, முனைஞனின் விதப்புரைமீது பணியாட்டொகுதிக் கல்லூரியினால் மாணவ அலுவலருக்கு ஏற்பாடு செய்யப்படும் கற்கை நெறிகள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் அதனை ஆக்குவதன்மீது அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படவும் வேண்டும்.

26. (1) அமைச்சரானவர், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எல்லா விடயங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் விடயங்கள் எல்லாவற்றினதும் அல்லது அதில் ஏதேனும் ஒன்று தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) பணியாட்டொகுதிக் கல்லூரியின் அலுவல்களின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் ;

(ஆ) பிரிவு 17 ஆல் தேவைப்படுத்துகின்றவாறன ஒழுக்காற்றுக்கோவையை உருவாக்குதல்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படவேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதனில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கஞ்செய்யப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியில் நீக்கஞ் செய்யப்பட்டதாக கருதப்படுகின்றதோ அத்தேதிய பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் அல்லது பணியாட்டொகுதிக் கல்லூரியின் பணிப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

27. (1) துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் பணியாட்டொகுதிக் கல்லூரியினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப் படும் ஏதேனும் செயலுக்காக பணியாட்டொகுதிக் கல்லூரிக்கு எதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது பணியாட்டொகுதிக் கல்லூரியின் பணிப்பின்மீது அவரால் பணியாட் டொகுதிக் கல்லூரியின் எவரேனும் உறுப்பினர், அலுவலர் சேவையாளர் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட் அல்லது செய் யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக அவருக்கு எதிராக,

அமைவதாதலாகாது.

(2) பணியாட்டொகுதிக் கல்லூரியால் அல்லது அதற்கு எதிராக் கொண்டுவரப்படும் ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் பணியாட்டொகுதிக் கல்லூரியினால் உறப்பட்ட ஏதேனும் செலவுகள் மற்றும் அத்தகைய ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் பணியாட்டொகுதிக் கல்லூரிக்கு செலுத்தப்பட்ட அல்லது பணியாட்டொகுதிக் கல்லூரியால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுகள் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது பணியாட்டொகுதிக் கல்லூரியின் பணிப்பின்மீது, இப்பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான எவரேனும் அத்தகைய ஆளினால் செய்யப்பட்டதாக அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் உறப்படும் ஏதேனும் செலவானது, அத்தகைய செயல், நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளித்தால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டிருந்தாலன்றி நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

28. சபையின் உறுப்பினர்கள் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரியின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்திற்குட் படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

சபையின் உறுப்பினர்கள் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரியின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் பகிரங்க அலுவலர்களாக் கருதப்படுதல்.

29. பணியாட்டொகுதிக் கல்லூரியானது (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குள் அட்டவணைப்படுத் தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

பணியாட்டொகுதிக் கல்லூரியானது இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

30. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பணியாட்டொகுதிக் கல்லூரிக்கும் பணியாட்டொகுதிக் கல்லூரி தொடர்பிலும் ஏற்புடையனவாகாது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாகாது.

31. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

32. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலன்றி :—

பொருள்கோடல்.

"இலங்கையின் ஆயுதந்தாங்கிய படைகள்" என்பது, (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தினால், (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தினால் மற்றும் (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தினால் முறையே தாபிக்கப்பட்ட இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை, இலங்கை வான்படை எனப் பொருள்படும் ;

"படைப்பிரிவு" என்பது, குறித்த சேவை அல்லது கல்விசார் துறை ஒன்று தொடர்பில் விசேடித்த பயிற்சியை நடாத்துகின்ற பணியாட்டொகுதிக் கல்லூரியின் கிளை எனப் பொருள்படும். பொதுவாக அத்தகைய படைப் பிரிவு மூன்று ஆகும். அவையாவன தரைப்படைப்பிரிவு, கடற்படைப்பிரிவு மற்றும் வான்படைப்பிரிவு.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்